**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண். 544/2024 நாள்- 01.06.2026

**<u>பி.வா.சா.1.செம்புலிங்கம்</u>**

**<u>குறுக்கு விசாரணை 4 ம் பிரதிவாதி தரப்பில்</u>**

முதல் விசாரணைக்கான சங்கதிகளை வழக்கறிஞருக்கு நான்தான் கூறினேன். என் கைவசமுள்ள வீடு மற்றும் காலிமனையை ஊர் பெரியோர்கள் முன்பாக வாய்மொழியாக பிரித்ததன் பெயரில் என் பாகத்துக்கு ஒதுக்கி நான் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். வீடு என் கைவசம் உள்ளது. காலிமனையை மணி என்பவருக்கு குடும்ப செலவிற்காக 2011 ம் ஆண்டு விற்றுவிட்டேன் என்றால் சரிதான். என் அண்ணன் பெரியசாமிக்கு வாய்மொழியாக கிடைத்த சொத்தை பொன்னுச்சாமிக்கு 2007, 2008 வருட வாக்கில் விற்றுவிட்டார். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையை 1 ம் வாதி ஏற்றுக் கொண்டு அவருக்கு ஒதுக்கிய சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி குமாருக்கு என் பாகத்திற்கு கிடைத்த காலிமனையை 2011 ம் ஆண்டு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். 2011 ம் ஆண்டிலிருந்து 4 ம் பிரதிவாதி தனிப்பட்ட உரிமையாளராக அந்த சொத்திற்கு பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.